திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, நிறைய பட்டு உற்பத்தியாளர்கள் இருக்கும் பகுதி ஆரணி தாலுக்கா. அந்த தாலுக்காவிலே பட்டை உற்பத்தி செய்ய வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நிலம் வேண்டுமென்று கூட்டுறவு சொசைட்டி மூலம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் அது வழங்கப்படவில்லை. அது விரைவில் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்போல ஆரணி, காஞ்சீபுரம், கும்பகோணம் போன்ற பட்டு உற்பத்தியிருக்கும் பகுதிகளில் இதுபோன்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் சொன்னது போல் ஆரணியிலும் அந்த ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் முயற்சித்து கூட்டுறவுச் சங்கமே அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கும்படி தயார் செய்துவிட்டால் உதவித் தொகை கொடுத்து அந்த வளர்ச்சியை அங்கு ஏற்படுத்த முடியும்.

Survey on availability of coal

* 50 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey about the availability of coal in this State has been conducted recently; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

வழக்குரைஞர்கள் கட்டண விதங்களை உயர்த்தல்

* 51 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோர்ட்டு வழக்குகளில், வக்கீல்களுக்கு கொடுக்கப்படும் செலவுத் தொகையில் சேரும் பீஸை உயர்த்த வேண்டும் என்று வக்கீல்கள் சங்கத்திலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

1974 சனவரி 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வழக்காடு செலவில் சேர்ந்துள்ள வழக்குரைஞர் கட்டணத்தை உயர்த்த வேண்டும் எனக் கேட்டு வழக்குரைஞர் சங்கங்களிடமிருந்து இத்துறைக்கு முறையீடுகள் எவையும் வரவில்லை. ஆனால் திண்டிவனம், செங்கற்பட்டு போன்ற வெளியூர் வழக்குரைஞர் சங்கங்கள் சிலவற்றிடமிருந்து இது குறித்து உயர்நீதி மன்றத்திற்கு வந்த முறையீடுகளை யொட்டி உயர்நீதி மன்றம் குழு ஒன்றை அமைத்து வழக்குரைஞர் கட்டண விதிகளை திருத்தியமைத்தது. அதற்கு ஒப்புதல் அளிக்குமாறு 1970 ஆண்டில் அரசுக்கும் எழுதிக் கேட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட விதிகள் எல்லா நிலைகளிலும் தற்போதுள்ள கட்டண விதத்தை பொதுவாக உயர்த்தியுள்ளன.

(இ) சட்டத் துறையின் 3—1—1973 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசு ஆணையில் அரசு 1973-ம் ஆண்டு மேற்கூறிய திருத்தியமைக்கப்பட்ட வழக்குரைஞர் கட்டண விதிகளுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR : Sir, there is a feeling among the lawyers that the fee that has been fixed is too low in view of the mounting cost of litigation that is prevailing at present. So, is there any proposal to revise the advocate's fee?

THE HON. THIRU S. MADHAVAN : It is better all these things are decided by the High Court. That is why I told that the High Court has appointed a Committee. The Committee recommended a proposal. The Government had accepted the proposal. If any proposal comes from the High Court, we will accept it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 52, 53 ஒத்திவைக்கப்படுகின்றன.

திருப்புவனம் கால்வாயின் குறுக்கே மேம்பாலம்.

* 54 வினா—**திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் கால்வாயின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?